# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

## O.S.No.18/2017

PW2 சித்ரா நாள் 18.04.2022

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் விவரங்கள் எல்லாம் எனக்கு தெரியும். 1 ஆம் வாதியின் பிள்ளைகள் பெயரில் 1 ஆம் பிரதிவாதியிடமிருந்து ஒரு சொத்தை கிரையம் வாங்கியுள்ளாரா என்றால் ஆமாம். தான செட்டில்மெண்ட்டில் கண்ட சொத்தைத்தான் கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் தான செட்டில்மெண்ட் பற்றி தெரியாது. கிரையம் வாங்கிய சொத்து கணபதியுடைய சொத்து அல்ல, அது என் அப்பா, அம்மா சம்பாதித்த சொத்து. வழக்கில் கிரையம் வாங்கிய நபர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் செல்லம்மாளின் பிள்ளைகள் தரப்பினர்களாக இருக்கிறார்கள். செல்லம்மாள் பிள்ளைகள் கிரையம் வாங்கிய சொத்து தாவா சொத்துடன் சேர்க்கப்படவில்லை. பொதுக்குடும்ப சொத்தை பங்கு பிரிக்கத்தான் வழக்கு போட்டுள்ளோம். செல்லம்மாள் பிள்ளைகள் கிரையம் வாங்கியபோது கூட்டு அனுபத்தில் உள்ளதா என்றால் இல்லை. அந்த சொத்து கணபதியுடைய தனி அனுபவத்தில் இருந்ததா என்று எனக்கு தெரியாது. கணபதி வெளிநாட்டில் இருந்தபொழுது எனக்கு பணம் அனுப்பியதில்லை. கணபதி வெளிநாட்டில் இருந்தபொழுது பணம் அனுப்பியதாகச் சொல்லியிருந்தால் அது தவறாகும். தாவா சொத்து 1 ஆம் பிரதிவாதியின் தனி அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால்சரியல்ல. என் அப்பா என் அம்மா பெயருக்கு செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. என் அப்பா என் அம்மா பெயருக்கு செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தார்

என்றும், அதில் என் அம்மாவிற்கு ஆயுட்கால அனுபவம் உள்ளது என்றும் சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே 1ஆம் வாதி உண்மையை சாட்சியாக சொல்லியுள்ளார் என்றும், அதை தவிர்த்து சாட்சியம் அளிப்பதற்காகத்தான் நான் 2ஆம் சாட்சியாக வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கணபதி வெளிநாட்டில் இருந்தபோது என்னுடைய வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பி வைத்தார் என்றும், அந்த பணத்தைப் பற்றி கணக்கு கேட்டபொழுது தான் பிரச்சனை ஏற்பட்டு பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் என் அப்பா பெயரில் இருந்தது. தாவா சொத்துக்கள் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 1ஆம் பிரதிவாதி பெயரில் பட்டா இருந்தது என்றும், நான் வழக்கிற்காக மறைத்து சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கு தவறானது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.